வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்குஎண். CC 128/2019

வழக்குசாட்சி PW5

| பெயர் | சுரேஷ், உதவி ஆய்வாளர், எம்1 மாதவரம் காவல் நிலையம் | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | நடராஜன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 52 |

தேதி 01.07.2026

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது எம்.1 மாதவரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கினை புலன் விசாரணை செய்த உதவி ஆய்வாளர், திரு. மணிவண்ணன் அவர்கள் பணிமாறுதலில் சென்றுவிட்டபடியால் கால விரையம் கருதி இவ்வழக்கின் புகார்தாரர் எதிரியுடன் சமரசமாக சென்று வழக்கை மேல்நடத்த விரும்பாத காரணத்தினால் வழக்கு கோப்புகளை கையாள்வதின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். 29.07.2011அன்று சென்னை மாநகர காவல் ஆணையரிடம் அளித்த புகாரினைப் பெற்று இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியாக காவல் உதவி ஆய்வாளர் மணிவண்ணன் நிலைய பணியில் இருந்தபோது எம்.1 மாதவரம் காவல் நிலைய குற்ற எண். 461/2011 இதச

பிரிவு 448, 341, 323, 354, 506(2), 342, 380 கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். மேற்படி புகார், முதல் தகவல் அறிக்கையானது அ.த.சா.ஆ.1, 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் ராதா, செல்வி.நந்தினி, கலா ஆகியோரை விசாரித்து தனிதனி வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் அன்றைய தினமே சாட்சிகளான பெல்வின், மணிகண்டன் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்துள்ளார். அவை முறையே அ.த.சா.ஆ.3 மற்றும். அ.த.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரிகளை தேடிவந்த நிலையில் 30.07.2011 காலை 08.00 மணிக்கு மாதவரம் கண்ணபிரான் கோவில் தெரிருவில் எதிரிகளை கைது செய்து சாட்சிகள் ஆனந்தன், பிரபாகரன் ஆகியோர் முன்னிலையில் அவர் தன்னிச்சையா முன் வந்து அளித்த ஒப்புதல் வாக்கு மூலத்தை பதிவு செய்துள்ளார்.

அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி " நான் சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை என் வீட்டின் பக்கத்தில் வைத்திருப்பதை எடுத்து ஆஜர் செய்கிறேன்" அ.த.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் அடிப்படையில் வழக்கு சொத்தான பச்சை கைப்பிடி போட்ட பிளேடு கத்தி–1 அதே சாட்சியின் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. படிவம் 95 வாயிலாக நீதிமன்றத்தில் Pl.NO.40/2013 ஆக ஒப்படைவுச் செய்யப்பட்டுள்ளது. மேற்படி படிவம் 95 , கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ 6, 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சான்றுப் பொருளான பச்சை கைப்பிடி போட்ட பிளேடு கத்தி–1 சா.பொ.1 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. பின்னர் எதிரிகள் நீதிமன்ற காவலில் உட்படுத்தப்பட்டார். பின்னர் இவ்வழக்கில் காயம் அடைந்த மல்லிகா, நந்தினி, ராதா ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த அரசு ஸ்டான்லி மருத்துவமனை மருத்துவர்கள் முத்துநாராயணன், சிவகுமார் ஆகியோர்களை விசாரித்து அவரிடம் இருந்து விபத்து பதிவேடுடன்(3 எண்ணிக்கை) கூடிய காயசான்று(3 எண்ணிக்கை) பெற்றுள்ளார். அவை முறையே அ.த.சா.ஆ 8 மற்றும் 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் எதிரிகள் மீதான குற்றப்பிரிவானது 448, 341, 323, 342, 506(2), 354 ஆக பிரிவு மாற்றல் அறிக்கை மூலம் பிரிவு மாற்றம் செய்யப்பட்டது. பிரிவு மாற்ற அறிக்கையானது அ.த.சா.ஆ.10 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. எதிரிகள் மீதான விசாரணை முடித்து இதச பிரிவு 448, 341, 323, 342, 506(2), 354–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையானது தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை**

நான் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம். சம்பவம் பற்றி நேரடியாக என்கு தெரியாது என்றால் ஆமாம். எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவுச் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சான்றுப் பொருளானது அனைத்து இடங்களிலும் கிடைக்கக்கூடிய பொருள் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. விபத்து பதிவேட்டில் எதிரிகள் யார் என்று தெரியாது என்றே கூறியுள்ளனர் என்றால் ஆமாம்.

**மறுவிசாரணை இல்லை.**